*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# அதிகாரம் குறித்த மாக்கியவல்லியின் நோக்கு: ஓர் அரசியல் மெய்யியல் ஆய்வு

**சோ. ஜெகநாதன்**
தத்துவவியல் மற்றும் விழுமியக்கற்கைகள் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

Correspondence: jeganathans@esn.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

நீண்ட வரலாற்றினை கொண்ட அரசியல் துறையின் வளர்ச்சியில் பல்வேறு சிந்தனையாளர்கள் பங்களிப்பு செய்து அரசியலில் பல புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். அவர்களுள் மேலைத்தேய சிந்தனையாளரான மாக்கியவல்லி குறிப்பிடத்தக்கவராவார். இவர் நவீன அரசியிலின் தந்தை என அழைக்கப்படுகின்றார். இளமைக் காலத்தில் நடைமுறை அரசியலில் ஈடுபாடுடையவராகக் காணப்பட்ட இவர் காலப்போக்கில் அரசியலில் திருச்சபையின் ஆதிக்கத்தை கண்டு அதிலிருந்து இருந்து விலகி புதியதொரு அரசியல் கருத்தியலை உருவாக்க முயன்றார். சமயமும் ஒழுக்கமும் அரசியலில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டு மன்னன் சட்டங்களை உருவாக்கி போர் செய்து வெற்றி பெற்று நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தி மக்களை ஆளுகைக்குள் உட்படுத்தி ஆட்சிபுரியும் ஆட்சிமுறையே நீண்ட காலம் நிலைபேறுடையது. மனிதர்களின் பலவீனங்களை சுட்டிக்காட்டி அவர்களை அன்பால் அஹிம்சையால் வழிநடத்தி ஆட்சி செய்வதை விட அதிகாரத்தால் அடக்கி ஆள்வதன் மூலமே ஆட்சியாளன் தமது இலக்குகளை அடையமுடியும் என்ற மாக்கியவல்லியின் சிந்தனைகள் அரசியல் விஞ்ஞானம் சார்பாக நியாயப்படுத்தக் கூடியதாக இருந்தாலும் அரசியல் மெய்யியல் நோக்கில் பல விமர்சனங்களை தாங்கியுள்ளதை ஒப்பீட்டு, விமர்சனம், வரலாறு, பகுப்பாய்வு போன்ற முறைகளினூடாக வெளிப்படுத்த இந்த ஆய்வு முனைகிறது.

**பிரதான சொற்கள்:** அதிகாரம், அரசியல் விஞ்ஞானம், அரசியல் மெய்யியல், ஒழுக்கம்

## 1. அறிமுகம்

விடயங்களின் தன்மை மற்றும் பொருள்களின் மூலங்கள் பற்றி ஆராய முனைந்த மெய்யியல் காலப்போக்கில் சமூக முறைமைகளையும் அவை சார்ந்த கருத்துக்களையும் ஆராயத் தொடங்கியதால் அது சமூக மெய்யியலாக வளர்ச்சியடைந்தது. இச்சமூக மெய்யியலின் ஒரு பிரிவே அரசியல் மெய்யியலாகும். இவ்வரசியல் மெய்யியலில் பகுப்பாய்வு செய்யப்படும் அதிகாரம் என்ற எண்ணக்கரு வரைவிலக்கண அடிப்படையிலும் பிரயோகத்தின் அடிப்படையிலும் சிக்கல் நிறைந்ததாகவே காணப்படுகிறது. அந்தவகையில் ஒரு நாட்டில் உள்ள மக்கள் மன்னர்களின் இறைமையை பேணுவதில் அதிகாரம் என்ற எண்ணக்கரு முக்கிய இடத்தினைப் பெறுகிறது. இந்த அதிகாரம் குறித்த பிரச்சினைகள், நீதி முதலான சமூக விழுமியங்கள், அரசின் தோற்றம் பற்றிய கருத்துக்கள், அரசியல் சமூக கடப்பாடுகள், உரிமைகள் முதலானவற்றினை நியமங்களாக அல்லது குறிக்கோளாக வைத்து ஆராய அரசியல் மெய்யியல் முனைகிறது. விடயம் என்னவாக இருக்க வேண்டும் (What ought to be in the case) என்பதோடும் நாம் என்ன செய்ய வேண்டும் (What we ought to do) என்பதோடும் தொடர்புபட்டுள்ள அரசியல் மெய்யியலில் அதிகாரம் என்ற எண்ணக்கரு முக்கியமானதாக அமைந்துள்ளது (Raphael, D.D., 1992 :20).

இறைவனின் படைப்புகளில் உயர்ந்த படைப்பாகக் கருதப்படும் மனிதனை சமூக விரோதியாகவும் நேர்மையில்லாத் தன்மை கொண்டவனாகவும் குறிப்பிட்டு மனித நற்பண்புகளை இனங்காணத்தவறும் மாக்கியவல்லியின் அரசியல் சிந்தனையானது அதிகாரத்தையே முதலும் முடிவுமாகக் கொண்டுள்ளது. மனித ஆளுமையை அதிகாரத்தால் மட்டும் வரையறை செய்யமுடியுமா? என்பதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன. எனவே அரசியல் மெய்யியலின் பார்வையில் நவீன அரசியலின் தந்தையான

மாக்கியவல்லியின் சிந்தனையில் அதிகாரம் குறித்த கருத்தியலையும் அதன் பொருத்தப்பாட்டையும் பகுப்பாய்வு செய்வதாக இந்த ஆய்வு அமைகிறது.

## 2. ஆய்வு முறையியல்

நூல்கள், கட்டுரைகள் மற்றும் முதல்தர தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வினை மேற்கொள்ளும் துறையாக மெய்யியல் விளங்குகிறது. இந்த ஆய்வுக்கான மூலங்கள் என்ற வகையில் மாக்கியவல்லியின் "இளவரசன்" (The Prince) மற்றும் அரசியல் விஞ்ஞானம், அரசியல் மெய்யியல் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள் கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு முறையியல் என்ற வகையில் மெய்யியலுக்குரிய நம்பிக்கை பற்றிய விமர்சன ரீதியான மதிப்பிட்டு முறை, எண்ணக்கருக்களின் தெளிவுபடுத்துகை முறை என்பனவும் பகுப்பாய்வு முறை, தொகுப்பு முறை, ஒப்பீட்டு முறை மற்றும் விமர்சன முறை என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினை சார்பாக எழுத்துருவிலுள்ள ஆக்கங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் முறையும் இங்கு பின்பற்றப்படுகிறது.

## 3. பெறுபேறும் கலந்துரையாடலும்

மக்களின் அன்றாட வாழ்வியலோடு இணைந்த அரசியல் விஞ்ஞான கற்கையானது பல்வேறு விடயங்களை தனது ஆய்வுப்பரப்பில் உள்ளடக்கியுள்ளதோடு அதன் வளர்ச்சிக்குப் பல்வேறு அறிஞர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். அரசியல் விஞ்ஞானக் கற்கைக்கு பங்களித்த அறிஞர்கள் இதனை ஒரு நிறுவனச் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப நியம ரீதியில் இயங்குகின்ற துறையாக இனங்கண்டு விளக்கியிருந்தனர். ஆனால் மெய்யியல் அதன் நடைமுறைச் சாத்தியத்தை இனங்கண்டு விளக்க முனைந்தது. எனவே அரசியல் விஞ்ஞானக் கற்கையானது அரசியல் மெய்யியலில் இருந்து வேறுபட்டது என்பதை நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

### *3.1 அரசியல் விஞ்ஞானமும் அரசியல் மெய்யியலும்*

அரசியல்சார் விடயங்களான நாடு, அரசு, அரசாங்கம், குடிமக்கள், அரசியல், சுதந்திரம், உரிமை, கடமை, நீதி, சொத்துடமை, சட்டதிகாரம் முதலான அடிப்படை விடயங்கள் குறித்து அக்கறை கொள்ளும் மெய்யியல் பிரிவு அரசியல் மெய்யியல் என்று அடையாளப்படுத்தப்படுகின்றது (ஜெகநாதன். சோ., *2018: 19*). மேலும் இதனை "அரசியல் கருத்துடன்பாடுகள், நம்பிக்கைகள், கொள்கைகள் என்பன தொடர்பான விமர்சன விபரிப்பினை மேற்கொள்ளும் ஒரு முறைமையான மாதிரி அல்லது தொகுதி" என்றும் குறிப்பிடலாம். (Ebentein, William 1969:61) அரசியல் கருத்துக்கள் தொடர்பான ஒரு மதிப்பிடலாக அமையும் அரசியல் மெய்யியலில் சிறப்பான அரசியல் கட்டமைப்பு அல்லது ஆட்சிமுறை யாது? அதனுடைய பண்புகள் எவை? சட்டரீதியற்றது என்றால் என்ன? அவை எவை? புரட்சி என்பது எப்போது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகின்றது? நீதி என்றால் என்ன? உரிமை, கடமை போன்ற எண்ணக்கருக்களின் ஊடாக என்ன கூறப்படுகின்றது? முதலான வினாக்கள் எழுப்பப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசியல் விஞ்ஞானம் என்பது ஒரு நாட்டின் அரசு பற்றியும் அவ்வரசின் மூலக்கூறுகளான குறிக்கப்பட்ட நிலப்பரப்பு, மக்கள்தொகை, அரசாங்கம், இறைமை பற்றியும் அரசாங்க நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், அமுக்கக்குழுக்கள் என்பன பற்றியும் ஆய்வு செய்கின்றது. மேலும் அரசியல் விஞ்ஞானம் ஓர் அனுபவ விஞ்ஞானம் என்ற வகையில் அரசியல்சார் எண்ணக்கருக்களையும் ஆட்சிமுறைகளையும் அனுபவ சோதனைகள் மூலம் ஆய்வு செய்து தெளிவுபடுத்துவதோடு அனுபவம், பயிற்சி, யதார்த்த நிலைகளை அடிப்படையாகக் கொண்டே விளக்கமளிக்கும். உதாரணமாக அரசியல் விஞ்ஞானியான மாவோசேதுங் சீனாவின் பொருளாதாரம், மக்களது தேவை, தனக்கிருந்த அனுபவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே தனது கருத்தை முன்வைத்தார். இது எல்லா நாட்டிற்கும் பொருந்தும் என எதிர்பார்க்க முடியாது. (Anthony Quinton (ed)., 1967:36)

அரசியல் மெய்யியலானது இலட்சியப் போக்கை மையமாகக் கொண்டே தனது கருத்தை பொதுத்தன்மைக்கு ஏற்றாற்போல முன்வைக்கும். பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் கருத்தானது எல்லா மக்களிற்கும் எல்லா நாட்டிற்கும் எல்லா சூழ்நிலைக்கும் பொருத்தமான சித்தாந்தமாகவே

விளங்குகிறது. மேலும் அது யதார்த்தத்தை கவனத்தில் கொள்ளாது இலட்சியப் போக்கையே கவனத்தில் கொள்வதோடு நியமம் சார்ந்ததும் மக்களது அரசு சார்ந்த அறிவினை மதிப்பிடவும் உதவுகிறது. ஆனால் அரசியல் விஞ்ஞானமானது நேர்வியல் சார்ந்தும் சூழ்நிலைகள் சார்ந்தும் சூழ்நிலைக்குப் பொருத்தமான ஆட்சி முறைகள் சார்ந்தும் விளக்குகிறது. இந்த அடிப்படையில் மாக்கியவல்லியின் அதிகாரம் குறித்த சிந்தனைகளை நாம் பார்க்கும் போது அரசியல் விஞ்ஞானத்திற்கான பண்புகள் அங்கு காணப்பட்டாலும் அரசியல் மெய்யியல் நோக்கில் அது பல விமர்சனங்களை கொண்டதாக உள்ளன.

### *3.2 மாக்கியவல்லியின் அரசியல் சிந்தனைகள்*

1469ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி இத்தாலியின் புளொரன்ஸ் நகரில் நடுத்தர குடும்பத்தில் வழக்கறிஞர் ஒருவருக்கு மகனாகப் பிறந்த மாக்கியவல்லி புளொரன்ஸ் பல்கலைக்கழகத்தில் தனது உயர் கல்வியைப் பூர்த்தி செய்தார். இலத்தீன் மொழி, மானிடவியல் ஆகிய துறைகளில் புலமை வாய்ந்தவராகவும் காணப்பட்டார். தனது 29வது வயதில் வேந்தராகப் (chancellor) பதவியைப் பெற்றுக்கொண்ட இவர் நாட்டிற்கான வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பாகவும் இருந்தார். அப்போது திருச்சபையின் நிருவாகம் அரசாங்கம், கல்வி, பொருளாதாரம் என்று பல பிரிவுகளிலும் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. இதனால் அரச பணியிலும் பிற்போக்கான நிருவாகம் காணப்பட்டது. 1512ல் புளொரன்ஸ் குடியரசில் எற்பட்ட சிக்கல் நிலையால் பதவி விலக்கப்பட்டு சிறையிலும் அடைக்கப்பட்டார். பின்னர் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட மாக்கியவல்லி அரச பணியாற்றிய காலத்தில் அவர் பெற்றிருந்த அனுபவங்களும் பிறநாட்டு அரசியல் சூழ்நிலைகளும் மாக்கியவல்லியை ஒரு புரட்சிகரமான அரசியல் சிந்தனையை முன்வைக்கத் தூண்டியிருந்தது. இராஜதந்திர அனுபவங்கள், வரலாறு, ஆட்சியாளனுக்குரிய இயல்புகள் என்பவை தொடர்பாக ஆய்வுகளில் ஈடுபட்ட இவர் இளவரசன் (prince), உரையாடல் (discourse) எனும் இரு நூல்களை எழுதியிருந்தார். அரசியல் தத்துவம் சார்ந்து பல நூல்களை எழுதினாலும் அவரது இளவரசன் எனும் நூல் பிற்காலத்தில் அவருக்கு புகழைப் பெற்றுக்கொடுத்தது. முடியாட்சியின் இயல்பினையும் செயல்முறைகளையும் விளக்கிக்காட்டும் இளவரசன் ஆட்சியாளனுக்கு ஆலோசனை வழங்கும் நூலாக இருந்தது. உரையாடலில் குடியாட்சியின் இயல்பினையும் செயல்முறை பற்றியும் விளக்கி கலப்பு அரசாங்கம் ஒன்றை உருவாக்க மாக்கியவல்லி முயன்றார்.

மாக்கியவல்லி வாழ்ந்த காலத்தில் அரச நிர்வாகம் பேரளவுடையதாகவும் திருச்சபை நிர்வாகம் அதிகாரம் உடையதாகவும் இருந்தது. திருச்சபையின் பிற்போக்கான போக்குகள் அரச நிர்வாகத்திலும் செல்வாக்குப் பெற்றதனால் அபிவிருத்திக்குத் தடையான ஒரு ஆட்சிமுறை மாக்கியவல்லியின் காலத்தில் நிலவியது. இக்காலப்பகுதியில் ஏற்பட்ட மறுமலர்ச்சி பழைய வர்த்தக பொருளாதார முறைமைகளை ஒழித்ததுடன் இவற்றை ஒரு புதிய ஒழுங்குமுறையின் கீழ் கொண்டு வந்தது. மறுமலர்ச்சியின் தாக்கம் இக்கால சமூக அரசியல் நிறுவனங்களில் பிரதிபலித்தது. இக்காலத்தில் காணப்பட்ட அரசியல் பிளவுகளால் ஐக்கிய இத்தாலியை உருவாக்க கூடிய அதிகாரம் யாரிடமும் இருக்கவில்லை. திருச்சபையும் பாப்பாண்டவரும் அதிகாரம் மிக்கவர்களாக இருந்தனர். இச்செயற்பாடுகள் மாக்கியவல்லிக்கு வெறுப்புகளை ஏற்படுத்தின. எனவே இத்தகைய சூழ்நிலையின் அடிப்படையில் தான் மாக்கியவல்லி பேரரசு ஒன்றை உருவாக்கும் சிந்தனையை இளவரசன் எனும் நூலில் முன்வைத்து இத்தாலியை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

மாக்கியவல்லியின் அரசியல் தத்துவம் மனித மனநிலையை உளவியல் கூறுகளை அடிப்படையாக கொண்டதாக இருக்கின்றது. இதன்படி மாக்கியவல்லி மனித மனம் நல்லெண்ணங்களின் இருப்பிடம் என்ற கருத்து தவறானது என்கிறார். குறைபாடுகள், ஆசைகள், தன்னல வேட்கைகள், தன்முனைப்புக்கள் ஆகியவற்றின் ஒண்றிணைப்பே மனித மனம் என்கிறார். மாக்கிவல்லியின் கருத்துப்படி மனிதர்கள் அடிப்படையில் பலவீனமானவர்களாகவும் இழிவானவர்களாகவும் நன்றி இல்லாதவர்களாகவும் வஞ்சனை மிக்கவர்களாகவும் அச்சம் நிறைந்தவர்களாகவும் உள்ளனர். ஆசைகள் நிறைந்த மனித மனம் சுயநலம் மிக்கது.

மனித மனம் ஆசைகளின் உறைவிடமாக இருந்தாலும் அதிலும் மாக்கியவல்லி பொருளாசை பற்றியே அதிகம் பேசி உள்ளார். தனது மனைவியை கூட ஒரு சொத்தாகக் கருதும் மனிதன் பொருட்களைத் தேடும் செயலில் ஓய்வு பெறப்போவதில்லை எனக் கூறும் மாக்கியவல்லி சொத்தை

சேர்ப்பதற்கு தடையாகவும் சொத்தை இழப்பதற்கு உடந்தையாகவும் இருக்கும் எந்த உறவையும் அமைப்பையும் மனிதன் விரும்பமாட்டான் அது மனித மனத்தின் இயல்பு என்றார். சொத்துக்களைப் பெறுவதற்கு தனது பெற்றோரைக் கூட கொலை செய்ய நினைக்கும் மனிதனது எண்ணமெல்லாம் அதிகாரத்தினைப் பெறுவதும் அதனை அடைய முயல்வதுமாகும். (நாராயணன், க., *1989 : 164,165*),இத்தகைய இயல்பினை கொண்ட மனிதர்களை அன்பால் அஹிம்சையால் வழிநடத்தி ஆள்வதை விட அடக்கப்பட்டு ஆள்வதன் மூலம் ஆட்சியாளன் தனது இலக்குகளை இலகுவில் அடையலாம் எனக் கூறும் மாக்கியவல்லி மனிதனை அடக்கி ஆள்வதற்கு ஒழுக்கம் நிறைந்த ஆட்சியாளனிடம் அரசாட்சியை ஒப்படைக்க வேண்டும் எனவும் ஆட்சியாளனுக்கான அதிகாரங்கள் பற்றியும் தனது இளவரசனில் தெளிவுபடுத்தியுள்ளார்.

### *3.3 இளவரசனில் ஆட்சியாளனுக்கான அதிகாரங்கள்*

மாக்கியவல்லியின் காலத்தில் அபிவிருத்திக்குத் தடையான ஒரு ஆட்சிமுறை காணப்பட்டதனால் இவர் காலத்தில் நிலவிய பல்வேறு ஆட்சிமுறைகளையும் தனக்கிருந்த அரசியல் அனுபவத்தினையும் கொண்டு இராட்சியம் (kingdom) ஒன்றை உருவாக்கி அதில் ஆட்சி செய்யும் ஆட்சியாளனுக்குரிய அதிகாரங்கள் பற்றியும் இவர் தெளிவுபடுத்தியிருந்தார். இராட்சியம் உருவாவதை இலக்காக கொண்ட அவரது சிந்தனையின் அடிநாதமாக காணப்படுவது அதிகாரம் என்பதாகும். இந்த அதிகாரத்தினை அவர் அக்கால மக்களின் வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களிலும் பிரயோகிக்க முனைந்திருப்பது அவரது படைப்புகளின்வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்சிமுறை, கல்வி, நிர்வாகம், பொருளாதாரம், பாதுகாப்பு போன்றவை தொடர்பான அனைத்திலும் அவர் ஒருவகையாக அதிகாரக் குவிப்பினை மையப்படுத்தியிருந்தார்.

ஆட்சியாளனின் சட்டங்கள் அரசியலுக்கு ஆரோக்கியத்தினையும் தெளிவினையும் தருவதாக இருக்கவேண்டும். சட்டங்களை உருவாக்கும் ஆட்சியாளனால் புதிய அரசினை உருவாக்கவும் பழைய அரசினை புதுப்பிக்கவும் முடியும். பலமான அரசு ஒன்று உருவாக்கப்பட்டு அயலவர்களை கவனித்து வரவேண்டும். அயலவர்களுக்குள் எதிரி காணப்படுவான். ஆட்சியாளனுக்கு எதிரி இருக்கக்கூடாது ஆனால் எதிரி உருவாவதை தடுக்கமுடியாது. இத்தகைய சந்தர்ப்பத்தில் இரண்டு அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும். *(1)* எதிரியை அவன் பக்கம் சார்ந்து நமது பக்கதிற்கு அணைக்க வேண்டும். *(2)* அவ்வாறு எதிரியை அணைத்து வெல்ல முடியாதவிடத்து வயலில் களை பிடுங்குவதை போன்று எதிரியை அழித்து விட வேண்டும். (N. Machiavelli, 1998: p.32)

எங்கே சிறந்த படைபலம் இல்லையோ அங்கே சிறந்த சட்டங்கள் இருக்க முடியாது அத்துடன் எங்கே சிறந்த படைபலம் இருக்கின்றதோ அங்கே சிறந்த சட்டங்களை காணமுடியும் (N. Machiavelli, 1998: p.77) என்று குறிப்பிடும் மாக்கியவல்லி பாதுகாப்பினை பேணுவதற்காக பலத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டதே அரசாகும். இந்த அரசு அதிகாரத்தினைப் பெற்று பாதுகாப்பினை விஸ்தரிக்க வேண்டும். இதற்காக நாட்டில் அரசன் படை பலத்தை உறுதியுடையதாக வைத்திருக்க வேண்டும். இளவரசன் *12*ஆம் அத்தியாயத்தில் பாதுகாப்பின் தன்மையினை பொறுத்து மூன்று வகையான படைப்பிரிவுகள் பற்றி மாக்கியவல்லி பேசுகிறார். *(1)* சொந்தப்படை, *(2)* துணைப்படை, *(3)* கூலிப்படை (N. Machiavelli, 1998: pp.42-53).

இதில் அரசன் சொந்தப்படையைத்தான் நம்பவேண்டும். இதனை இன்றைய நமது அரசாட்சியோடும் தொடர்புபடுத்தி நோக்க வேண்டும். நாட்டில் எவ்வளவு தான் எதிரிகள் ஆட்சியாளனுக்கு இருந்தாலும் அவனது சொந்தப்படை வேலிமறிப்புக்கள் மூலமோ இதர வழிகள் மூலமோ அவனை பாதுகாப்பதில் அக்கறையுடையதாகவே இருக்கும். அரசு பலமான படைப்பிரிவினை கொண்டிருக்குமாயின் வெற்றிகரமான ஆட்சியை நடாத்தமுடியும். இதனால்தான் படை என்பது அரசின் பிரதான தூணாகும் என்றார். எனவே நாட்டு மக்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்குவதோடு அவர்களுக்கு இராணுவ நுட்பங்களைக் கற்பித்து எவ்வேளையும் நாட்டுக்காகப் போராடக்கூடிய மனோநிலை கொண்டவர்களாக மாற்றுவதற்கு பயிற்சியளிக்க வேண்டும். இதன் மூலம் ஏனைய நாடுகளால் முன்னெடுக்கப்படும் படையெடுப்புகளை முறியடிக்க முடியும் என்பதை “ஒவ்வொரு அரசினதும் பிரதான அடிப்படையாக சட்டங்களும் ஆயுதங்களும் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் எங்கே அவை காணப்படுகிறதோ அதனை தவிர்க்க முடியாது பின்தொடர வேண்டியநிலை ஏற்படும்” (N. Machiavelli, 1998: pp.54-60) என்பதனூடாகக் கூறியுள்ளார்.

பெருந்தன்மையுடனும் தாராண்மைச் சிந்தனையுடனும் ஆட்சியாளன் நடந்து கொள்ளக்கூடாது. பலம், பாதுகாப்பு, திறமை என்பவற்றை பெற்றிருப்பது ஆட்சியாளனின் பொறுப்பாகும். அரசனுக்கு பயம் இருக்கக்கூடாது. அப்போது தான் மக்களுக்கு பயபக்தி மனநிலை ஏற்படும். ஆட்சியாளர்கள் தனக்குரிய உதவியாளர்களை தெரிவு செய்யும்போது தனது கட்டளைகளை ஏற்பவர்களை மட்டுமே முக்கியத்துவம் கொடுத்துத் தெரிவு செய்யவேண்டும். பலவீனமான அரசுகளை தாக்குகின்றவனாகவும் பலமான அரசுகளுடன் கூட்டுச் சேர்ந்து அதிகாரச் சமநிலையை பேணுகின்றவனாகவும் இருக்கவேண்டும். இதனால்தான் சிறப்பான பக்கத்தில் சார்ந்திருப்பது எப்போதும் சிறப்பானது என்ற கருத்தை மாக்கியவல்லி முன்வைக்கின்றார்.

மாக்கியவல்லியின் கருத்தின்படி அன்பை காட்டிலும் அச்சமே மனிதனின் செயல்களை இலகுவில் ஒழுங்குபடுத்துகின்றது. மனிதன் அச்சத்தின் காரணமாக அன்பை இழப்பானே தவிர அன்பின் காரணமாக ஒருபோதும் அச்சத்தை விடமாட்டான். அன்பு, பாசம், காதல் போன்ற உணர்வுகளும் இவ்வுணர்வுகளைச் சுற்றி சுழலும் உறவுகளும் மனிதனின் இயல்பிற்கு மாறாக அவன் மனதில் வலிந்து திணிக்கப்படுகின்றது. அவ்வுணர்வுகள் அவனை சிறைப்படுத்துகின்றன. தனக்கு நன்மை கிடைக்கும் என்ற எண்ணத்தில் மனிதன் தனக்குத் தானே விலங்கிட்டு சிறைப்படுகிறான். நன்மை கிடைக்கவில்லை என்றால் விலங்குகளை அறுத்துக்கொண்டு சிறையை உடைத்து வெளியேறி விடுவான். அச்சமும் கோழைத்தனமும்தான் மனிதனின் உண்மையான இயல்புகள். வீரம் என்பது மனிதனின் வெறும் வெற்றுத்தோற்றமே என்றார் மாக்கியவல்லி. (நாராயணன், க., *1989: 165,166*)

இளவரசன் நூலில் 17ஆம் அத்தியாயத்தில் இளவரசனின் அன்புக்கு பாத்திரமாவது நல்லதா? அடக்கி ஆளுவதன் மூலம் அச்சத்தை ஏற்படுத்துவது நல்லதா? என்ற விவாதத்தில் ஒருவர் அன்புக்கு ஆட்படவும் வேண்டும். அச்சத்தை விளைவிக்கவும் வேண்டும். ஆனால் இந்த இரண்டில் எது நல்லது எனக் கேட்பின் அன்பிற்கு ஆட்படுவதை விட அச்சத்தை விளைவிப்பதே பாதுகாப்பானது என்றார். ஏனெனில் மனிதர்களிடம் காணப்படும் அன்பு சுயநலம் மிக்கது. நோக்கம் நிறைவேறியதும் அன்பு அறுந்து போய்விடும். ஆனால் தண்டனை கிடைக்கும் என்றொன்று என்றென்றும் நிலைபெற்றதாகவே இருக்கும். (N. Machiavelli, 1998: p.66)

மனித மனத்தில் இயல்பாக உள்ள அச்சத்தையும் தன்னல வேட்கையையும் அன்பால் போக்க இயலாது வலிமை மிக்க அச்சமும் தன்னலமுமே அன்பை இலகுவாக வென்றுவிடுகின்றன. சொத்துக்களும் அதிகாரங்களும் மனிதனின் அச்சத்தை போக்கி அவனது ஆசைகளை நிறைவு செய்கின்றன. எனவே ஆட்சியில் இருப்பவர்கள் மேற்குறித்த விடயத்தை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஆட்சியாளனின் பேரரசுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை வயலில் களை பிடுங்குவது போன்று கொன்று விடுதல் வேண்டும். ஆனால் அவர்களுடைய சொத்துக்களும் அரசுடமையாக்கப்படக்கூடாது. மாறாக அவனது வாரிசுகளுக்கு பிரித்து கொடுத்தல் வேண்டும். இவ்வாறு கொடுப்பதன் மூலம் சொத்துக்களைப் பெற்றுக் கொண்ட பிள்ளைகள் தந்தையை கொன்றுவிட்ட குற்றத்தை மறந்து அரசுக்கு நன்றி சொல்லி மகிழ்வார்களே தவிர அரசை வெறுக்கவோ அரசுக்கு எதிராக செயற்படவோ முன்வரமாட்டார்கள் என்று மாக்கியவல்லி கூறுகின்றார்.

ஒழுக்கவியல் கருத்துக்களும் சமய உணர்வுகளும் அரசியலிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். அவை எல்லாம் அரசியல் ஆதிக்கத்துக்கு உட்பட்டவையாக இருக்க வேண்டுமே ஒழிய அவைகளின் ஆதிக்கத்துக்கு அரசு உட்படக்கூடாது என்று மாக்கியவல்லி கூறுகின்றார். அன்பாகவும் அமைதியாகவும் ஒழுக்க நெறிமுறைப்படியும் ஆட்சி செய்யும் எந்தவொரு ஆட்சியும் நீடித்து நிலைத்து நிற்காது, வளர்ச்சி காணாது. போர் செய்து வெற்றி பெற்று நாட்டை விரிவுபடுத்தி அதிகாரங்களையும் பெருக்கிக்கொள்வது ஆட்சியாளனின் குறிக்கோளாக இருக்கவேண்டும். ஆட்சியாளன் பேரரசனை உருவாக்க யாரோடு வேண்டுமானாலும் பேசலாம் ஒப்பந்தம் செய்யலாம். இவை எல்லாம் அரசியல் இலக்குக்குச் சாதகமாக வரும் போது மட்டுமே நீடிக்கப்படும். பேரரசின் இலக்குக்கு இடையூறு வரும் போது ஆட்சியாளன் யுத்தம் செய்ய வேண்டும். யுத்தத்தில் அவன் ஆண் சிங்கம் போன்று தீவிரமாக படையாளிகளை கொல்லுதல் வேண்டும். அதேநேரம் பேச்சு வார்த்தைக்குத் தயாராகவும் இருக்கவேண்டும். அப்போது குள்ள நரியை போன்று தந்திர புத்தியுடன் ஆட்சியாளன் செயற்பட வேண்டும், இக்குறிக்கோளை அடைய எத்தகைய வழிமுறைகளையும் செயல்திட்டங்களையும் ஆடசியாளன் மேற்கொள்ளலாம். இவை எல்லாம் அரசாட்சியின் நுட்பங்களாக

அரசியல் அறங்களாகக் கொள்ளப்படும் என்று மாக்கியவல்லி இளவரசனின் 18ஆம் அத்தியாயத்தில் கூறுகின்றார். (N. Machiavelli, 1998: p.69)

மாக்கியவல்லி தனது காலச்சூழல் காரணமாக அதிகாரம் என்ற எண்ணக்கருவை வலிந்து ஏற்றுக்கொண்டிருந்தார். அதாவது இத்தாலியில் காணப்பட்ட அரசியல் குழப்பங்களுக்கு தீர்வாக அவர் அரசியலில் அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும் என எண்ணினார். நடைமுறை சாத்தியப்பாடு தொடர்பாக அவருடைய அரசியற் சிந்தனையில் குற்றம் காண்பவர்கள் கூட அரசியலில் அவரின் கோட்பாடுகளின் ஆதிக்கத்தை மறுக்கவில்லை. காலத்தின் கண்ணாடியாக சூழ்நிலையின் வெளிப்பாடாக அமையும் இவரது சிந்தனைகள் மூலம் வரலாற்றின் துணை கொண்டு நிகழ்கால பிரச்சினைகளின் புதிய பரிமாணங்களுக்கும் தீர்வு காணக்கூடியதாகவுள்ளது. அதிகார உடமைதான் அனைத்து சிக்கலையும் தீர்க்கும் எனக் கருதிய மாக்கியவல்லி அதிகாரத்தினை எவ்வாறெல்லாம் கைப்பற்ற முடியும் எப்படி அதனை நிலைநிறுத்த முடியும் எனச் சிந்தித்தாரே தவிர அதிகாரத்தின் பயன்பாடு பற்றி மதிப்பிட முயலாதது அரசியல் மெய்யியல் ரீதியில் பல விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளது.

### *3.4 மாக்கியவல்லியின் சிந்தனையின் பொருத்தப்பாடு*

அதிகாரங்கள் அனைத்தையும் தன்னிடத்தில் வைத்துக்கொண்டும் ஆட்சியாளர் நல்லவனாகவும் வல்லவனாகவும் இருக்கவேண்டும் என்றார். ஆனால் அந்த அதிகாரத்தை வைத்திருப்பவன் தனது பிள்ளைகளுக்கோ அல்லது தான் விரும்பியவருக்கோ கொடுக்க வேண்டும் என்று எண்ணக்கூடாது அதனை நல்லொருவருக்கு ஒப்படைக்க வேண்டும். அனைத்து அதிகாரங்களையும் கையில் எடுத்துக் கொண்டு செய்யும் ஆட்சி நீண்ட காலம் நிலைபெறாது. ஒருவர் நல்லவராக இருந்தாலும்கூட அவர் நீண்டகாலம் அதிகாரச் சுமையை சுமக்க முடியாது. அதிகாரத்தை மருந்து போல பயன்படுத்தி ஆளத்தொடங்குபவர்கள் காலப்போக்கில் மது போல அருந்தி வெறியாளர்களாக மாற வாய்ப்புண்டு. இத்தகைய சூழலில் ஒன்று சேர்ந்து அதிகாரங்களை பகிர்ந்து கொண்டு ஆட்சி செய்ய வேண்டும் என்ற மாக்கியவல்லியின் அறிவுரையானது அவரது அடிப்படைச் சிந்தனைக்கு முன்னுக்குப் பின் முரணானதாகக் காணப்படுவதால் இவர் ஒரு கோவையான சிந்தனையாளர் என்ற தகுதியை இழந்துவிடுகிறார்.

அரசாட்சியின் வடிவமைப்பை விளக்குவதில் அக்கறை காட்டாத மாக்கியவல்லி ஆட்சியில் இருப்போர் அதிகாரத்தை எப்படி எப்படியெல்லாம் நிலைநிறுத்திக் கொள்ளமுடியும் என்பதை விளக்குவதிலையே குறியாக இருந்தார். உலக ஒழுங்கு தடைப்பட்டு இருந்த இத்தாலியில் அதனைப் பேணுவதற்கு சட்டங்களின் வழி அதிகாரங்களை இறுக்கமாக செயல்படுத்த வேண்டிய தேவை இருந்தது. எனவே அதிகாரம் ஒருவனது கையில் இருந்தால்தான் விரைந்து முடிவெடுத்து சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்ற சிந்தனையை இளவரசனில் முடியாட்சியின் ஊடாக முதன்மைப்படுத்தியிருப்பதென்பது சமகால ஜனநாயகத்திற்கும் அதில் பேசப்படும் வலுவேறாக்கம் பேன்ற சிந்தனைகளுக்கும் முரண்பட்டுக் காணப்படுகின்றது.

நாட்டில் ஏற்படும் புரட்சிகளை அரசன் அதிகாரத்தை பயன்படுத்தி அடக்க வேண்டும். அதில் இரு வகையான அதிகாரங்களைப் பற்றி மாக்கியவல்லி குறிப்பிடுகின்றார். (1) அரசன் தனது சுகபோகங் களுக்கும் அதிகாரங்களுக்கும் எதிர்ப்பு கொடுப்போரை அடக்குவது. (2) பெரும்பான்மையினருக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் செயற்படுவோரை அடக்குவது. புரட்சிகளின் போது நயம் நட்டம் பார்க்க முடியாது. சிலர் பாதிக்கப்பட்டாலும் பலர் பயன்பெறுவர் என்ற எண்ணத்தில் அரசன் தனது இரும்புக் கரங்களைக் கொண்டு அடக்க வேண்டும். அடக்குமுறை எத்தகையது என்றாலும் அதனை அரசியலின் நற்பண்பு எனக் கூறுவது எந்தளவு பொருத்தமானது என்ற வினா எழுகின்றது.

ஆளுகின்ற அரசன் தன் அரசியல் குறிக்கோள்களை அடைவதில் வெற்றி பெறுவதே அவனது இலக்காகும். இதற்காக அவன் பொய் உரைக்கலாம், நன்றி மறக்கலாம், துரோகம் செய்யலாம், கொலை புரியலாம், மேலும் எதை வேண்டும் என்றாலும் செய்யலாம். இவை எல்லாம் அரசியல் நுட்பங்களாகவும் அரசியல் தர்மங்களாகவும் கருதப்படுமே தவிர இவற்றை ஒழுக்கமற்ற செயலாக அரசியல் உலகம் மதிப்பிட மாட்டாது (N. Machiavelli, 1998: pp.07-15)என அரசியலின் நற்பண்பு என்பதற்கு மாக்கியவல்லி தரும் விளக்கம் பகுத்தறிவு ரீதியாக ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. மேலும் ஆட்சியாளன் தனது இலக்கை அடைவதற்காக சந்தர்ப்பவாத அரசை உருவாக்கலாம் எனக் கூறுகின்றார். ஆனால் சந்தர்ப்பவாத போக்கை ஒழுக்கவியல் ரீதியாக எவரும்

ஏற்றுக்கொள்வதில்லை. நற்பண்புகளாக அன்பு, நேர்மை, கருணை, சகிப்புத்தன்மை, ஒத்திசைவு போன்றவை பொதுவாகச் சுட்டிக்காட்டப்படுகிறன. இவற்றை விடுத்து அதிகாரங்களை கைப்பற்றுவதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் ஆட்சியாளன் கடைப்பிடிக்கும் எல்லா நெறிமுறைகளும் நற்பண்புகளே எனக் கூறும் மாக்கியவல்லியின் சிந்தனையில் சூழ்ச்சி, ஏமாற்று, வஞ்சகம், வன்செயல் போன்றவை அரசியல் நற்பண்புகளாக தெரிவதென்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

அறிவின் வழிப்பட்ட செயற்பாடுகள், பண்புகள் அனைத்தும் நற்பண்புகள், நற்செயல்கள் என குறிப்பிட்ட பிளட்டோ முதலான கிரேக்க சிந்தனையாளர்களின் சிந்தனைக்கு மாற்றாக ''இன்பநுகர்வு'' என்ற நோக்கத்தோடுதான் மனிதன் வாழ்கின்றான் எனக் கூறும் மாக்கியவல்லி இன்பம் பயப்பன எல்லாம் நல்லனவென்றும் இன்ப நுகர்வுக்கு தடையாக இருக்கும் செயல்களும் பண்புகளும் தீமையானவை ஆகும் என்றார். அடுத்தவர் மேல் அதிகாரம் செலுத்துவதை இன்பமாகக் கருதும் அரசியலில் சூழ்ச்சி, பொய், வன்செயல் போன்றவற்றை இன்பநுகர்வு எனும் வெற்றிக்காக செய்யலாம் என்ற முடிவுக்கு மாக்கியவல்லி வருவது ஏற்புடையதாகாது.

மக்கள் எப்போதும் அன்புடையவராக இருப்பர் என்று கூறமுடியாது. எப்போது வேண்டுமென்றாலும் புரட்சி செய்து ஆட்சியை கவிழ்ப்பார்கள். இன்று இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நடப்பது இதுதான். எனவே அதிகாரத்தை பெருக்கி கொள்வதில் அரசன் குறிக்கோளாக இருக்கவேண்டும். இந்தக் குறிக்கோளை அடையும் முயற்சியில் அறக்கோட்பாடுகள் தடையாக இருக்குமானால் அவற்றை மீறி செற்படுவது அரசியல் அறம் எனக் கூறும் கருத்து அரசியல் மெய்யியல் நோக்கில் ஏற்புடையதாகாது. சமயம் மற்றும் அறவியல் சிந்தனைகளை அரசியலில் இருந்து அப்புறப்படுத்த முனைகிறார் மாக்கியவல்லி. மனித வாழ்க்கை என்பது இம்மூன்றினாலும் ஆளப்படுவது ஆகும். எனவே இவற்றை பிரிப்பது என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாகும். இவை பிரியும் போது வீண் முரண்பாடுகளும் மோதல்களும் உருவாகி நாட்டை அழிவுக்கு இட்டுச்செல்லுமே ஒழிய அபிவிருத்திக்கு வழிசமைக்காது. உளவியல் கூறுகளைக் கொண்டு அரசியல் சிந்தனையை முன்வைப்பது மனித சமூகத்திற்கு எல்லா வேளையிலும் பொருத்தமானதாக அமையாது. ஏனெனில் ஒரு சூழ்நிலைக்குத் தேவைப்படும் உளவியல் தேவை இன்னுமொரு சூழ்நிலைக்குத் தேவையற்றதாக இருக்கும். ஆகையினால் உளவியல் கூறுகளை பொதுத் தேவையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒழுக்கவியல் சிந்தனைகள், அறிவு வளர்ச்சி, சமூதாய ஒற்றுமை எனும் பாரம்பரிய அரசின் குறிக்கோள்களை உடைத்து தனிமனிதன் பொருள் வளத்தை பெருக்குவதே அரசின் குறிக்கோளாக இருக்கவேண்டும் எனும் புதிய ஏற்பாட்டினை அரசியலில் புகுத்தியவர் மாக்கியவல்லியே ஆவார் என்ற இட்டனிங் கருத்து மாக்கியவல்லியை எதிர்மறை பண்புடையவராக காட்டுகிறது. கிறிஸ்தவத்தின் ஆரம்ப கால பாதிப்புகளை நாம் இவரிடத்தில் காணமுடிகிறது. அதாவது மனிதரில் உயரிய இயல்புகளை இனங்காணத் தவறும் மாக்கியவல்லி விதிவிலக்காக நிகழும் சில விடயங்களை கொண்டு ஒட்டுமொத்த மனித சமூதாயத்தின் காணப்படும் சட்டம், ஒழுங்கு, நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சிகளை நிராகரிக்கப்பதென்பது ஏற்புடைய சிந்தனையாகாது.

பெரும்பான்மையான மனிதர்கள் சிந்தித்து செயற்படும் திறனற்றவர்களாகவும் உடனடி இன்பத்தை நாடி ஓடுபவர்கள் என்ற மாக்கியவல்லியின் சிந்தனை நடைமுறை சாத்தியம் அற்றது. ஒரு செயலை செய்வதற்குமுன் அச்செயலின் நன்மை, தீமைகளை ஆராய்ந்து தீமையான செயலாக அது இருக்குமாயின் அதனை செய்யாமல் விடுவதே அறிவுடமை ஆகும். அதாவது ஒரு செயலைச் செய்யலாமா? செய்யக்கூடாதா? எனத் தீர்மானிக்கும் ஆற்றல் மனிதனுக்கு உள்ளது. அந்த ஆற்றலை மறுத்து மனிதனின் இயல்பை மாக்கியவல்லி மாசுபடுத்தி உள்ளார். மாக்கியவல்லி தனது அரசியல் வாழ்வில் பெற்ற கசப்பான அனுபவங்கள், ஏமாற்றங்கள், துன்பங்கள் காரணமாகவே மனிதனின் உயரிய ஆற்றல்களை மறுத்து தனது கொள்கைகளை உருவாக்கி உள்ளார். பெரும்பான்மையானவர்கள் தன்னலம், அச்சம், பொருளாசை, புகழ்வெறி கொண்டவர்களாக இருப்பர் என்ற மாக்கியவல்லியின் சிந்தனைகள் நேர்நிலைத் தன்மையானது அல்ல.

அரசு எப்போதும் சமய அறவியல் சிந்தனையில் சிறைப்படுத்தப்படாமலும் எந்தச் சமூக நிறுவனத்தையும் சார்ந்திருக்கவும் கூடாது என்றார் மாக்கியவல்லி. அவருடைய சிந்தனையானது அக்கால சூழ்நிலைக்குப் பொருத்தமாக அமையுமே தவிர இன்றைய நவீன பூகோள வலையமைப்பினால் ஒரு நாடு மற்றைய நாடுகளோடும் அதன் அமைப்புகளோடும் இணைந்து

இயங்க வேண்டியது கட்டாயமானதாகவுள்ளது. அரசானது எல்லைகளை விஸ்தீரணப்படுத்தி தன்னை விரிவுபடுத்திக்கொண்டு அதிகாரத்தையும் பொருள் ஆதிக்கத்தயையும் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற சிந்தனையானது அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லுமே தவிர ஆரோக்கியமான அரசியற் சூழலை உருவாக்காது. ஒருவரை அடக்கியாள நினைப்பது என்ற சர்வாதிகார எண்ணம் இன்று தோல்வியுற்ற சிந்தனையாகவே அமைந்துள்ளது.

நம்பிக்கையை காப்பாற்றுவது தமது நலனுக்கு எதிரானதாக இருக்கும் என்றால் அந்நம்பிக்கையை காப்பாற்றாமல் விடுவதே நல்லதாகும். ஒரு இளவரசன் தன் கட்டளைகளை நிறைவேற்றாமல் விடுவதற்கு பல காரணங்களை முன்வைக்க முடியும். பாவம் அப்பாவி மனிதர்கள் அதனை எளிதில் நம்பிவிடுவார்கள். எனவே வாக்குறுதிகளை நிறைவேற்றல் என்ற விடயத்தில் மன்னர்கள் எப்போதும் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டும் (N. Machiavelli, 1998: pp.68-71) என்ற இவரது சிந்தனைகள் பிளேட்டோவின் ஐயவாதத்துடன் தொடர்புபடுகின்றது (ஜெகநாதன், சோ., *2021 : 40 -42).*

மாக்கிவல்லியின் அதிகாரம் தொடர்பான சிந்தனைகளை வரலாற்றின் அடிப்படையில் பார்க்கும் போது ஏனையவர்களின் அதிகாரம் தொடர்பான சிநதனைகள் காலத்தின் தேவையை கருத்திற் கொண்டதாக அமைந்திருக்க மாக்கியவல்லியின் சிந்தனைகள் ஒரு முழுமையான சர்வாதிகாரப் போக்கினை பிரதிபலித்திருப்பதனை காணமுடிகின்றது. இவர் இளவரசனில் ''ஆட்சியை பிடிக்க விளையும் ஒரு ஆட்சியாளன் அறநெறிக் கொள்கைகளை அடியோடு புறக்கணித்து விட வேண்டும். அனைத்திற்கும் மேலாக ஒரு அரசு மிகுந்த ஆயுத பலம் கொண்டதாக இருக்க வேண்டும். தன் சொந்த நாட்டு குடிமக்களில் இருந்து திரட்டப்படுகின்ற இராணுவம் மட்டுமே நம்பத்தக்கது. கூலிப்படைகளை அல்லது மற்ற அரசுகளின் படைகளில் தங்கியிருக்கும் அரசு எப்போதும் ஆற்றல் அற்றதாகவும் ஆபத்துக்கு உள்ளாகக் கூடியதாகவுமே இருக்கும்'' எனக் கூறும் கருத்து இவரைச் ''சர்வாதிகாரிகளுக்கான வழிகாட்டியாக'' அடையாளப்படுத்துகிறது.

இத்தாலியின் அரசியலில் காணப்பட்ட பிற்போக்கு நிலையில் ஆத்திரம் கொண்ட இவர் நாட்டை மீட்டெடுப்பதற்கு ஓர் இளவரசன் தேவை என்பதை உணர்ந்தார். இளவரசன் அறிவின் உறைவிடம், ஆற்றலின் மூலஸ்தானம், கீர்த்தியின் முதலிடம், கம்பீரத்தின் சீற்றம், ஈவிரக்கம் அற்றவனாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தார். இத்தகைய சர்வாதிகாரக் கருத்துக்களால் அரசியல் வரலாற்றில் மாக்கியவல்லி கடுமையான விமர்சனத்தை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. மனித உருவம் கொண்ட பேய் வஞ்சகத்தையும் தந்திரத்தையும் குறிப்பதற்கு அவருடைய பெயர் அடையாளப்படுத்தப்பட்டது. மாக்கியவல்லியின் சிந்தனைகளைப் பின்பற்றியவர்களே அவரைத் தீவிரமாகக் கண்டித்து இருப்பது அவரது சிந்தனையின் பலவீனத்தைக் காட்டுகின்றது. அவர் கூறிய கருத்துக்கள் அவருடைய சொந்தக் கருத்துக்கள் அல்ல என்ற நிலைப்பாடும் தத்துவ உலகில் காணப்படுகின்றது. மாக்கியவல்லியே தான் புதிய கொள்கைகள் எதனையும் கூறவில்லை. உலக வரலாற்றில் வெற்றி பெற்ற பல அரசர்கள் கையாண்ட உத்திகளைத் தான் கூறியிருப்பதாக அடிக்கடி பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

## 4. முடிவுரை

மாக்கியவல்லி வாழ்ந்த காலத்தில் உலக ஒழுங்கு தடைப்பட்டும் இன, மத, மொழி ரீதியான சமூக அசைவுகள் எந்தவித வலைப்பின்னலுக்கும் உட்படாதிருந்த சூழ்நிலையில் அவரது அரசியற் சிந்தனைகள் மனித மனநிலையை உளவியற் கூறுகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்தன. காலத்தால் முற்பட்டதான இவரது சிந்தனைகளில் ஆட்சியாளர்கள், பொதுமக்கள், படைவீரர்கள் என்போருக்கான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் விரவப்பெற்றுள்ளனவாயினும் ஆங்காங்கே அதிகாரக் குவிப்பு முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. அதிகாரமில்லாதவிடத்து ஆட்சியை நடத்துவது கடினமானது என்ற எடுகோளின் அடிப்படையில் ஆட்சியாளனே அதிகாரங்கள் அனைத்திற்கும் உரிமையுடைவர் என்றும் அவ்வதிகாரங்கள் அனைத்தும் அரசன் தன்திறமையாலும் வலிமையாலும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறியிருந்தார். அவ்வதிகாரங்களைப் பெறுவதற்கான உத்திமுறைகளை அரசியல் சாணக்கியமாகவும் அரசியல் நற்பண்புகளாவும் குறிப்பிடும் மாக்கியவல்லியின் சிந்தனைகள் சமகால அரசியல் விஞ்ஞான அதிகாரக் கட்டமைப்புக்கு வினைத்திறனாக அமைகின்ற போதும் அரசியல் மெய்யியல் நோக்கில் இவர் ஆட்சியாளனை பலம், அதிகாரம் என்ற கட்டளைக்கற்களினூடாகப் பார்க்க முனைவதும் பெரும்பான்மை மக்களின் நல்ல

குணங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் யுத்தம் புரிந்து மனித ஆளுமையை அடக்கியாள ஆலோசனை வழங்குவதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஜனநாயகத்திற்கும் பகுத்தறிவுக்கும் உலக அமைதிக் கோட்பாட்டிற்கும் எதிரான சர்வதிகாரக் கருத்தியலாக அமைகிறது.

**உசாத்துணைகள்**

அனஸ், எம்.எஸ்.எம்., (2003), *மெய்யியல் அறிமுக உரைகள்,* பேராதனை: பண்பாட்டு வட்டம்.

சாமிநாத சர்மா, வெ., (மொ.பெ) (1985), *பிளேட்டோவின் அரசியல்,* சென்னை: திருமகள் நிலையம்.

ஜமாஹீர். பீ.எம், (2010) *மெய்யியல் - பிரச்சினைகளும் பிரயோகங்களும்,* கண்டி : நதா வெளியீடு.

நாராயணன், க., (1989), *அரசியல் சிற்பிகள்* , புதுச்சேரி : மாரி பதிப்பகம்

சிவராஜா, அ., (2008), *அரசறிவியல் மூல தத்துவங்கள்,* கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

தமிழ்மாறன். வி.ரி., (1998), *ஒப்பீட்டுச் சட்டம் ஒரு சில சிந்தனைகள்,* சென்னை : மதுரி மலர்வகம்.

ஜெகநாதன், சோ., (2018), *தமிழர் மரபில் மெய்யியல் சிந்தனைகள் - ஒரு நோக்கு* நெய்தல், தொகுதி : 09 எண் : 01, இலங்கை – வந்தாறுமூலை : கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஜெகநாதன், சோ., (2021), பிளேட்டோ பேசும் நீதி : ஓர் அரசியல்சார் மெய்யியற் பார்வை

நெய்தல், தொகுதி : 10 எண் : 02, இலங்கை – வந்தாறுமூலை : கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

றியால், ஏ. எல். எம்., மாஹிர், ஐ. எல். எம்., (2014), *தோமஸ் ஹொப்ஸின் நீதி பற்றிய எண்ணக்கரு",* Journal of Social Review Volume 2, இலங்கை, ஒலுவில் : சமூக விஞ்ஞானத்துறை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Aristotle., (1941), *Politics,* in The Basic Works of Aristotle. Ed. by. Richard Mckeon. New York: Random House.

Aumann, Francis R. *Justice,* in Collier's Encyclopedia. Ed. by William D, Halsey and Louis Shores, (1969), USA: Crowell-Collier Education Co-operation.

Baurmann, M., & Lahno, B., (2009). *Perspectives in Moral Science.* RMM. Retrieved from https://jlupub.ub.uni-giessen.de/bitstream/handle/jlupub/424/00_025_holler.pdf?sequence=1&isAllowed=y

Dudley Knowles., (2001), *Political Philosophy*, USA: Routledge.

Hobbes, Thomas., (1969), *Leviathan,* Ed. by Michael Oakeshott. London: Collier – Mavmillan Ltd.

Julius, D. J., and et. all. (1999). *A Memo from Machiavelli*, The Journal of Higher Education. 70:2, pp. 113-133, DOI: 10.1080/00221546.1999.11780758. Retrieved from https://www.tandfonline.com/doi/pdf/10.1080/00221546.1999.11780758

Krishnamohan, T., (2014). *Machiavelli.* Politicalmanac. Retrieved from https://tkm.politicalmanac.com/2014/12/%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B5%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BF/

Lucchese, F. D., (2017). *Machiavelli and constituent power: The revolutionary foundation of modern political thought.* European Journal of Political Theory. 16(1) 3–23. sagepub.co.uk/journalsPermissions.nav DOI: 10.1177/1474885114544911 ept.sagepub.com. Retrieved from https://journals.sagepub.com/doi/pdf/10.1177/1474885114544911

Machiavelli, N., (1998), *The Prince,* (Trans.) Harvey C. Mansfield, London: The University of Chicago Press.

Raphael, D.D., (1992), *Problems of Political Philosophy,* the Macmillan Press LTD, London.